மாதிரி காலாண்டுத் தேர்வு –2022

**பத்தாம் வகுப்பு- தமிழ்**

**நேரம் :2 30 மணி மதிப்பெண்: 100**

**பகுதி-1 (மதிப்பெண்கள் :15)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 15 × 1=15

1.உலகப் பெருந்தமிழர்----------?
அ.இளங்குமரனார் ஆ.பாவாணர் இ.திரு.வி.க ஈ.பெருஞ்சித்திரனார்

2.பின்வருவனவற்றில் எது காவியம்?
அ.கண்ணன்பாட்டுஆ.பாப்பாபாட்டுஇ.குயில்பாட்டுஈ.புதியஆத்திச்சூடி

3.'பெரிய மீசை சிரித்தார்' இதில் 'சிரித்தார்' என்பது….?
அ.பண்பு ஆ.உவமை இ.அன்மொழி ஈ.வினைமுற்று

4."சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி"–என்னும் அடியில் சிற்றூர் என்பதைக் குறிக்கும் சொல்
அ.பாக்கம் ஆ.சிலம்பு இ.பேரூர் ஈ.புத்தூர்

5.''அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது----------
அ.தமிழ் ஆ.அறிவியல் இ.கல்வி ஈ.இலக்கியம்

6."ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு " இவ்வரிகளில் அமையும் பொருள்கோள் எது?
அ.கொண்டு கூட்டு ஆ.எதிர்நிரல்நிறை
இ.முறை நிரல்நிறை ஈ.ஆற்றுநீர்

7."வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு" –இக்குறட்பாவில் பயின்று வரும் அணி -----அணி.
அ.வஞ்சப்புகழ்ச்சி ஆ.உவமை அணி
இ.சொற்பின்வருநிலை ஈ.ஏகதேச உருவக அணி

8.கீழ்கண்டவற்றுள் உரையாடு மென்பொருள் எது?
அ.பெப்பர் ஆ.இலா இ.வாட்சன் ஈ.வேர்டுஸ்மித்

9.'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது---
அ.புத்தூர் ஆ.மூதூர் இ.பேரூர் ஈ.சிற்றூர்

10.சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்-------
அ.வஞ்சிப்பா ஆ.வெண்பா இ.அகவற்பா ஈ.கலிப்பா

11.வினா---------வகைப்படும்.
அ.ஆறு ஆ.எட்டு இ.இரண்டு ஈ.ஐந்து

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ."

12.இப்பாடலின் ஆசிரியர்----
அ.கம்பர் ஆ.குமரகுருபரர் இ.பெருஞ்சித்திரனார் ஈ.இராமன்

13.இப்பாடல் இடம் பெற்றுள்ள நுல்----
அ.இராமாவதாரம் ஆ.தேம்பாவணி இ.பரிபாடல் ஈ.நற்றிணை

14.'தோழமை யென்றவர்' இவ்வடியில் 'அவர்' யார்?
அ.வேடன் ஆ.இராமன் இ.பரதன் ஈ.இலக்குவன்

15.பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச்சொற்களை குறிப்பிடுக.
அ.தோழமை–ஏழமை ஆ.நெடுந்திரை–போவாரோ
இ.சொல்லொரு–சொல் ஈ.நெடும்படை–நடுங்கிடும்

**பகுதி- 2 (மதிப்பெண்- 18)**

**பிரிவு- 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்க.** 4 × 2 = 8

**(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

**16.விடைகளுக்கு ஏற்ற வினா அமைக்க.**
அ.செப்புமொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும்.
ஆ.ஹாக்கிங்,கலீலியோவின் நினைவுநாளில் பிறந்து, ஐன்ஸ்டின் பிறந்தநாளில் இறந்தார்..

17.வணிக வானம் வசப்படும்–யாருக்கு?

18.வணக்கம்! வாருங்கள்! அமருங்கள்! – இச்சொற்கள் எதன் பொருட்டுக் கூறப்படுகின்றன?அவை எச்சொற்கள்?

19."அணைகிடந்தே சங்கத்தவர் காக்க"இத்தொடரின் இருபொருள் கூறுக.

20.அன்னைமொழியே பாடலில் குறிப்பிடப்படாத ஐம்பெருங்காப்பியங்கள் எவை?

21."விடல்" என முடியும் திருக்குறளை எழுதுக

**பிரிவு -2**

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்க.** 5 × 2=10

22.'சொல்லுதல்' என்னும் ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.

23.கூட்டப்பெயர்களுக்குரிய சொல்லைக் கண்டறிந்து எழுதுக.
அ.குவியல் ஆ.கட்டு

**24.கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைக்க.** "மலை – மாலை"

**25.கலைச்சொற்கள் தருக.**
அ.Epic Literature ஆ.Thesis

**26.இருதொடர்களை ஒரு தொடர்களாக அமைக்க.**
மலர் உண்டு,பெயரும் உண்டு.

**27.பொருத்தமான நிறுத்தக்குறிகள் இடுக**
வரகு காடைக்கண்ணி குதிரைவாலி முதலிய சிறு கூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை.

**28.பகுபத உறுப்பிலக்கணம் தருக.** "உரைத்த"

**பகுதி - 3 (மதிப்பெண்கள்- 18)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 × 3 = 6

29.அவரையும் துவரையும் கொத்து கொத்தாகக் காய்த்துள்ளது.– இதுபோல் குலை வகைச் சொற்கள் மூன்றினைத் தொடர்களில் அமைக்க.

30.இன்றைய அறிவியல் சிந்தனை மனிதனை மேம்படுத்துகின்றதா?உங்கள் கருத்தினை எழுதுக.

**31.உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே படைத்திருக்கின்றார்.இல்லறம் செய்தல் விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார்.

**வினாக்கள்**
அ.வள்ளுவர் இல்லறவியலில் எதனை வலியுறுத்துகிறார்?
ஆ.அனிச்ச மலரின் தன்மை யாது?
இ.இவ்வுரை பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 × 3 = 6

**(34ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்)**

32.மீனவன் காடனுக்குச் சிறப்பு செய்ய காரணம் யாது?

33.குமரகுருபரர் குறிப்பிடும் வைத்தியநாதபுரி முருகனின் அணிகலன்கள் யாவை?

**34.அடிபிறழாமல் எழுதுக.**

"வெய்யோனொளி" எனத்தொடங்கும் கம்பரின் பாடல்.

அல்லது

"தென்னன்" என்பது முதல் தொடங்கும் பெருஞ்சித்திரனார் பாடல்.

**பிரிவு- 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 × 3 = 6

35.கொண்டுகூட்டுப் பொருள்கோளை விளக்குக.

36."நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று."
– குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

37."இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது." இக்குறட்பாவில் இடம்பெறும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

**பகுதி- 4 (மதிப்பெண் -25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 × 5 = 25

38.அ.சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்துப் பாடலையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்று உருவாக்குக.

(அல்லது)

ஆ.சந்தக்கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

39.அ.தரமற்ற உணவினை வழங்கிய உணவு விடுதி ஒன்றின் மீது புகார் தெரிவித்து உரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ.விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்றத் தோழனுக்குப் பாராட்டு மடல் எழுதுக.

**40.படம் உணர்த்தும் கருத்தை நயமுற எழுதுக.**



41. 12,எழில் நகர்,மதுரை–5 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ச.சிற்பி என்பவர் மதுரை மாவட்ட மைய நூலகத்திற்குச் செல்கிறார். உறுப்பினர் படிவத்தைப் பெற்று அதனை நிரப்புகிறார். தேர்வர் தம்மை சிற்பியாக நினைத்துக் கொண்டு உரிய படிவத்தை நிரப்புக.

**42.அ.குறிப்பைப் பயன்படுத்தி எதிர்மறையான சொற்கள் அமையும் விடை தருக.**

அ.கொடுத்து சிவந்த ஆ.மறைத்துக் காட்டு
இ.அருகில் அமர்க ஈ.பெரியவரின் அமைதி
உ.புயலுக்குப் பின்

(அல்லது )

**ஆ.மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark.The milky clouds starts their wandering.The colourful birds start twitting their morning melodies in percussion. The Cute butterflies dance around the flowers.The flowers fragrance fills the breeze. The gently blows everywhere and makes everything pleasant.

**பகுதி - 5 (மதிப்பெண்- 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடைஅளிக்க.** 3× 8 = 24

43.அ.நிகழ்கலை என்னும் தலைப்பில் நாளிதழ் ஒன்றிற்குத் தலையங்கம் எழுதுக.

(அல்லது)

ஆ.கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.

44.அ.அன்னமையா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதை பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ.மேரியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்கள் கருத்துகளை விவரிக்க.

45.குறிப்புகளைப் பயன்படுத்தி, தலைப்பிட்டு கட்டுரை எழுதுக.

அறிவியல் வளர்ச்சி –செயற்கை நுண்ணறிவு– சாதனங்கள் – பயன்கள் – எதிர்காலம்

(அல்லது)

ஆ."நீ விரும்பும் விண்வெளி வீரர்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

ஆக்கம் :
ச.சேட்டு மதார்சா,
M.A,M,A.,M.PHIL,BEd,PGDTR,DIP.JOUR., DIP.FOLK, PGDIP.ANIMATION,TPT
ப.ஆ.தமிழ், ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உ.பள்ளி
ஈரோடு - 638001.
அலைபேசி - 8883681115